**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சத்தியமங்கலம்**

**முன்னிலை: திருமதி.S.சுசீலா, பி.ஏ., பி.எல்.,**

**மாவட்ட உரிமையியல் நீதிபதி, சத்தியமங்கலம்**

**2025-ம் வருடம் அக்டோபர் மாதம் 06 ம் நாள் திங்கள்கிழமை**

**(2056 திருவள்ளுவராண்டு ஸ்ரீவிசுவாவசு வருடம் புரட்டாசி மாதம் 20-ம் நாள்)**

**இ.ம.எண்.6/2025 in**

**அசல் வழக்கு எண்.119/2019**

ஜெயமணி ...... மனுதாரர் / வாதி

/எதிர்/

1. குப்புலட்சுமி
2. அவினாசியப்பன்
3. கருப்புசாமி
4. சின்னராஜ்கவுண்டய்யா
5. கிருஷ்ணசாமிக்கவுண்டர்
6. K.பழனிசாமி
7. விமலாராணி
8. K.செல்வி
9. M.யாஸ்மின்
10. M.சலீம் (இறப்பு)
11. அதிகாரம் பெற்ற அலுவலர், கார்பரேசன் வங்கி
    தூத்துக்குடி கிளை
12. அஸ்மாபானு
13. தாஹிரா
14. ஜீபைர் ......... 1 முதல் 11 எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள்

12 முதல் 14 எதிர்மனுதாரர்கள் / உத்தேச கட்சிக்காரர்கள்

இம்மனுவானது 22.09.2025 அன்று என் முன்னிலையில் இறுதியாக விசாரணைக்கு வந்து மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.K.சிவக்குமார் அவர்கள் ஆஜராகியும், 4, 7 மற்றும் 8-ம் எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.K.பிரகாஷ்பாலாஜி அவர்கள்

ஆஜராகியும், 9-ம் எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.A.முகமதுமுபாரக் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுவுரை தாக்கல் இல்லை என்று மேற்குறிப்பு செய்தும், 1 முதல் 3, 5, 6, 11, 12, 13 மற்றும் 14-ம் எதிர்மனுதாரர்கள் தோன்றாத் தரப்பினர்களாக கருதப்பட்டும், 10-ம் எதிர்மனுதாரர் காலம்சென்றுவிட்டதாலும், மனுதாரர் மற்றும் 4, 7 மற்றும் 8-ம் எதிர்மனுதாரர்கள் தரப்பு வாதம் கேட்கப்பட்டு, ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டு, இதுநாள்வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்.,

## 1. உத்தரவு

இம்மனு காலவரையறை சட்டம் பிரிவு 5 ன் படி, காலம்சென்ற 10-ம் பிரதிவாதிக்கு எதிராக வழக்கில் ஏற்பட்ட அபேட்மெண்ட் உத்தரவினை ரத்துசெய்ய ஏற்பட்ட 795 நாட்கள் காலதாமதத்தை மன்னித்து ஏற்றுக் கொண்டு உத்தரவு பிறப்பிக்கக் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

## 2. மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்துள்ள மனுவின் சுருக்கம்

அசல் வழக்கானது மனுதாரர் / வாதியால் பிரதிவாதிகளுக்கு எதிராக விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வழக்கு நிலுவையில் உள்ளபோது, 10-ம் பிரதிவாதி கடந்த 03.12.2022-ம் தேதியன்று 12 முதல் 14 எதிர்மனுதாரர்களை முதல்நிலை வாரிசுகளாக விட்டுவிட்டு காலம்சென்றுவிட்டார். அவரது இறப்பு மற்றும் வாரிசுகள் குறித்த விவரம் மனுதாரருக்கு தெரியாத காரணத்தினால், மனுதாக்கல் செய்ய இயலவில்லை. எனவே, 10-ம் பிரதிவாதிக்கு எதிராக வழக்கு 03.03.2023-ம் தேதியன்று அபேட் ஆகிவிட்டது. அவ்வாறான அபேட்மெண்ட் உத்தரவினை ரத்துசெய்ய குறித்த காலத்தில் மனுதாக்கல் செய்ய முடியவில்லை. எனவே, காலம்சென்ற 10-ம் பிரதிவாதிக்கு எதிராக வழக்கில் ஏற்பட்ட அபேட்மெண்ட் உத்தரவினை ரத்துசெய்ய ஏற்பட்ட 795 நாட்கள்

காலதாமதத்தை மன்னித்து ஏற்றுக் கொண்டு உத்தரவு பிறப்பிக்கக் கோரி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3. 4-ம் எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டு, 7 மற்றும் 8-ம் எதிர்மனுதாரர்கள் தரப்பில் ஏற்றுக்கொள்ளப்பட்ட எதிருரையின் சுருக்கம்**:-

மனுதாரரின் மனு மோசடியானது. சட்டப்படிக்கும், நியாயப்படிக்கும் நிலைக்கத்தக்கதல்ல. ஒருவர் இறந்தபிறகு அவரது வாரிசுகளை சட்டப்படி 90 நாட்களுக்குள் கட்சிக்காரராக சேர்க்கப்பட்டிருக்க வேண்டும். கட்சி சேர்க்காத காரணத்தினால், 10 ம் பிரதிவாதிக்கு எதிராக வழக்கு அபேட் ஆகிவிட்டது. மனுவில் கூறியுள்ள சங்கதிகள் பொய்யானவையாகும். நீதிமன்றத்தின் மூலமாக 10-ம் பிரதிவாதி காலம்சென்ற விவரங்களைப் பற்றி கேட்டிருக்க வேண்டும். எவ்வித நடவடிக்கையும் மனுதாரர் எடுக்கவில்லை. மனுதாரர் 795 நாட்கள் காலதாமதத்திற்கான காரணம் குறிப்பிடவில்லை. மனுதாரர் வேண்டுமென்றே கவனக்குறைவால் இத்தனை நாட்கள் மனுதாக்கல் செய்யவில்லை. இம்மனுவானது காலவரையறைச் சட்டத்தினால் பாதிக்கப்பட்டுள்ளது. காலதாமதத்திற்கு போதுமான காரணங்கள் கூறவில்லை. எனவே, மனுவை செலலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என எதிர்வாதம் செய்யப்பட்டுள்ளது.

**4.** மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பில், சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

**5.** இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினை யாதெனில், இம்மனு அனுமதிக்கத்தக்கதா, இல்லையா? என்பதேயாகும்.

**6. தீர்வு**

**6.1** வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்கையில், அசல் வழக்கு விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டு, விசாரணைக்காக வழக்கு

நிலுவையில் உள்ளபோது, 10-ம் பிரதிவாதி 12 முதல் 14 எதிர்மனுதாரர்களை முதல்நிலை வாரிசுகளாக விட்டுவிட்டு காலம்சென்றுவிட்டதாகவும், அவரது இறப்பு மற்றும் வாரிசுகள் குறித்து, மனுதாக்கல் செய்ய இயலவில்லை காரணத்தினால், 10-ம் பிரதிவாதிக்கு எதிராக வழக்கு 03.03.2023-ம் தேதியன்று வழக்கு அபேட் ஆகிவிட்டதாகவும், எனவே, 10-ம் பிரதிவாதிக்கு எதிராக வழக்கில் ஏற்பட்ட அபேட்மெண்ட் உத்தரவினை ரத்துசெய்ய ஏற்பட்ட 795 நாட்கள் காலதாமதத்தை ஏற்றுக் கொண்டு உத்தரவு பிறப்பிக்கக் கோரி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக மனுதாரர் தரப்பில் வாதம் செய்யப்பட்டுள்ளது.

**6.2** இதனை மறுத்து 4, 7 மற்றும் 8-ம் எதிர்மனுதாரர்கள் தரப்பில், ஒருவர் இறந்தபிறகு அவரது வாரிசுகளை சட்டப்படி 90 நாட்களுக்குள் கட்சிக்காரராக சேர்க்கப்பட்டிருக்க வேண்டும் என்றும், கட்சி சேர்க்காத காரணத்தினால், 10 ம் பிரதிவாதிக்கு எதிராக வழக்கு அபேட் ஆகிவிட்டது என்றும், நீதிமன்றத்தின் மூலமாக 10 ம் -பிரதிவாதி காலம்சென்ற விவரங்களைப் பற்றி கேட்டிருக்க வேண்டும் என்றும், எவ்வித நடவடிக்கையும் எடுக்காத காரணத்தினால், 10-ம் பிரதிவாதிக்கு எதிராக வழக்கு அபேட் ஆகிவிட்டது என்றும், மனுவானது காலவரையறைச் சட்டத்தினால் பாதிக்கப்பட்டுள்ளது என்றும், காலதாமதத்திற்கு போதுமான காரணங்கள் கூறவில்லை. எனவே, செலவுத்தொகையுடன் மனுவை தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என எதிர்வாதம் செய்யப்பட்டுள்ளது.

**6.3** மனுதாரர் 10-ம் பிரதிவாதிக்கு எதிராக ஏற்பட்ட அபேட்மெண்ட்டை ரத்து செய்ய கோரி மனு தாக்கல் செய்வதில் ஏற்பட்ட 795 நாட்கள் காலதாமதத்தை மன்னிக்க வேண்டி இம்மனுவை காலவரையறைச் சட்டம் -5-ன் கீழ் தாக்கல் செய்துள்ளார். அசல் வழக்கானது மனுதாரர் / வாதியால் 1 முதல் 10 எதிர்மனுதாரர்கள் / 1 முதல் 10 பிரதிவாதிகளால் ஏற்படுத்தப்பட்ட கிரைய ஆவணங்கள் செல்லாது என விளம்புகை கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில் காலம் சென்ற 10-வது எதிர்மனுதாரர் பெயரில் கடந்த 23.01.2013-ல் ஏற்படுத்தப்பட்ட கிரைய ஆவணம் செல்லாது என பரிகாரம் கோரப்பட்டுள்ளது. தற்போது 10-ம் பிரதிவாதி காலம் சென்றுவிட்டதால், அவரது வாரிசுகளை தரப்பினர்களாக சேர்க்க வேண்டியும், 10-வது எதிர்மனுதாரரின் வாரிசுகளை வழக்கில் சேர்க்க ஏற்பட்ட காலதாமதமான 795 நாட்கள் தாமதத்தை மன்னிக்க கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரர் காலம்சென்ற 10-ம் எதிர்மனுதாரரின் வாரிசுகளை விவரம் தெரியாததால், காலதாமதம் ஏற்பட்டதாக இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரரின் மேற்படி காரணம் போதுமானதாக இல்லை. இருப்பினும், அசல் வழக்கானது தாவா சொத்தின் உரிமை தொடர்பாக விளம்புகை பரிகாரம் கேட்டு தாக்கல் செய்யப்பட்டுள்ளதால், அதை நிரூபிக்கும் வகையில் இருதரப்பினருக்கும் வாய்ப்பு வழங்க வேண்டியது விசாரணை நீதிமன்றத்தின் கடமையாகும். இருப்பினும், வாதியால் ஏற்பட்ட காலதாமதத்தால் பிரதிவாதிகளுக்கு ஏற்பட்ட இழப்பை ஈடு செய்யும் வகையில் கீழ்க்கண்ட நிபந்தனையுடன் இம்மனு அனுமதிக்கப்படுகிறது.

**இறுதியாக,**

**மனுதாரர், 4-ம் எதிர்மனுதாரருக்கு செலவுத் தொகையாக ரூ.750/-ஐ 16.10.2025-ம் தேதிக்குள் செலுத்தும் பட்சத்தில் இம்மனுவை அனுமதிக்கலாம் என்றும், தவறும் பட்சத்தில் இம்மனுவானது தள்ளுபடி செய்யப்படும் என்றும் இந்நீதிமன்றம் உத்தரவிடப்படுகிறது- மீண்டும் அழைக்க 16.10.2025**

இந்த உத்தரவானது என்னால் சுருக்கெழுத்தருக்குச் சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு பின் என்னால் பிழை திருத்தம் செய்யப்பட்டு 2025 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 06 ம் நாள் அவையறியப் பகரப்பட்டது.

SELVAM SUSILA

Digitally signed by SELVAM SUSILA
Date: 2025.10.07 05:34:26 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

சத்தியமங்கலம்.

**மனுதாரர்கள் தரப்பு சாட்சிய சான்றாவணங்கள் :-** **- இல்லை -**

**எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிய சான்றாவணங்கள் :-** **- இல்லை -**

SELVAM SUSILA

Digitally signed by SELVAM SUSILA
Date: 2025.10.07 05:34:33 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

சத்தியமங்கலம்.

FAIR ORDER

I.A.6 / 2025

O.S.119 /2019

06.10.2025